**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**முன்னிலை :– திருமதி. P. கனிமொழி, L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.

<u>2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 10 ஆம் நாள்.</u>

<u>2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் நாள் புதன் கிழமை</u>

TNMY09-001164-2022

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 110 / 2024</u>**

| | | |
|---|---|---|
| புகார்தாரர் | : | என். கார்த்திகேயன், 39/2026<br>த/பெ நாகராஜன்,<br>கோயில் கிளியனூர்,<br>தரங்கம்பாடி தாலுக்கா. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | : | ஜெ. நித்தியகுமாரி, 39/2026,<br>க/பெ ஜெயசீலன்<br>கதவிலக்கம் 2/237,<br>மெயின்ரோடு அன்னவாசல்,அரங்கக்குடி,<br>தரங்கம்பாடி தாலுக்கா. |

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்றம் சாட்டப்பட்டது | | எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் |
| 2. | குற்றம் குறித்து வினவப்பட்டது | | எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் |
| 3 | சம்பவ நாள் | | 04.12.2020 |
| 4 | புகார்நாள் | | 28.08.2021 |
| 5. | கு.வி.மு.ச. பிரிவு 251ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | | 13.06.2023 |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | | --- |



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.24 17:41:27 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | ம.சா.1 | 24.09.2024 | 06.12.2024 |
| | | | எ.ம.சா.1 | 02.09.2025 | 07.10.2025 |
| 8. | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | | 27.05.2025 | | |

இவ்வழக்கு 17.03.2022 அன்று STC.No.538/2022 என இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் 24.09.2024 அன்று C.C.No.110/2024 என இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, 10.03.2026–ஆம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே. இளையராஜா அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S. சிவச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்...

## <u>தீர்ப்புரை</u>

1. எதிரியானவர் கடந்த 04.12.2020ம் தேதி தனது குடும்ப செலவிற்காகவும், இதர கடனை தீர்க்கும் பொருட்டும் புகார்தாரரிடமிருந்து ரூ.3,00,000/–த்தை கடனாக பெற்றுக்கொண்டு கேட்கும்பொழுது கடன்தொகையை திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டார் என்றும், புகார்தாரர் எதிரியிடம் தொகையை திருப்பி கேட்டபொழுது எதிரியானவர் அவரது வங்கி கணக்குள்ள State Bank of India செம்பனார்கோவில் கிளை காசோலை எண். 551415 என்ற காசோலையை கடந்த 07.07.2021 தேதியிட்டு ரூ. 3,00,000/–த்தை பூர்த்தி செய்து புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், புகார்தாரர் காசோலை வேண்டாம் பணமாக கொடுக்கும்படி கேட்டதற்கு எதிரி அவரது வங்கி கணக்கில் போதிய தொகை இருப்பதாகவும், வங்கியில் காசோலையை தாக்கல் செய்தால் பணம் பெற்றுக்கொள்ளலாம் என எதிரி சொன்னதை நம்பி புகார்தாரர் அன்றைய தினமே



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.24 17:41:35 +0530

அவரது வங்கி கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளியனூர் கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்ததாகவும், அந்த காசோலையானது எதிரியின் கணக்கில் போதிய தொகை இல்லை என கடந்த 14.07.2021 அன்று குறிப்பாணையுடன் திருப்பப்பட்டதாகவும், இதுகுறித்து புகார்தாரர் எதிரிக்கு கடந்த 22.07.2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிரி கடந்த 03.08.2021 அன்று பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த பதில் அறிவிப்பில் உள்ள விபரங்கள் எதுவும் உண்மையல்ல என்றும், எனவே, எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என தெரிந்தே எதிரி புகார்தாரரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு மேற்படி காசோலையை கொடுத்ததால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர் என எதிரி மீது இந்த வழக்கை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார் மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றம்புரிந்திருக்கிறார் என போதிய முகநுட்ப ஆதாரங்கள் இருந்ததால் இந்த வழக்கானது மேற்படி பிரிவின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அவருக்கு இந்த வழக்கின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 204ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய காலஅவகாசம் கொடுக்கப்பட்டு குவிமுச பிரிவு 251ன் கீழ் எதிரியிடம் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138ன் கீழான குற்றம் குறித்து வினவியபோது எதிரி பொய் வழக்கு என மறுத்தார். அதன் பேரில் இந்த வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

4. புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.24 17:41:43 +0530

5. ம.சா.1 தனது சாட்சியத்தில் புகார் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்து கடந்த 07.07.2021 தேதியிட்ட ரூ.3,00,000/—த்திற்கான S.B.I வங்கி, செம்பனார்கோவில் கிளையின் 551415 என்ற எண் கொண்ட காசோலையின் அசல் ம.சா.ஆ.1 ஆகவும், கிளியனூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியால் (Funds Insufficient) போதிய தொகை என்ற காரணத்துடன் 14.07.2021 அன்று திருப்பப்பட்ட திருப்புதல் குறிப்பாணையின் அசல் ம.சா.ஆ.2 ஆகவும், கடந்த 22.07.2021 அன்று புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 26.07.2021 தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை ம.சா.ஆ.4 ஆகவும், 03.08.2021 தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி கொடுத்த பதில் அறிவிப்பு ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

6. புகார்தாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் படித்து காட்டி வினவியபோது எதிரி புகார்தாரர் தரப்பு சாட்சி சொல்வது **பொய் சாட்சி** என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் **உண்டு** என்றும் தெரிவிக்கப்பட்டது. எதிரி தரப்பில் எதிரி எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

7. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், எதிரிக்கு எதிராக மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை புகார்தாரர் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளாரா? என்பதேயாகும்.

## தீர்வு:

8. **இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதம் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.**

9. புகார்தாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், எதிரி கடந்த 04.12.2020ம் தேதி அவரது குடும்ப செலவிற்காகவும், இதர கடனை தீர்க்கும் பொருட்டும் புகார்தாரரிடமிருந்து ரூ.3,00,000/—த்தை கடனாக பெற்றுக்கொண்டு



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.24 17:41:51 +0530

கேட்கும்பொழுது கடன்தொகையை திருப்பி அளிப்பதாக ஒப்புக்கொண்டார் என்றும், புகார்தாரர் எதிரியிடம் தொகையை திருப்பி கேட்டபொழுது எதிரியானவர் அவரது வங்கி கணக்குள்ள State Bank of India செம்பனார்கோவில் கிளை காசோலை எண். 551415 என்ற காசோலையை கடந்த 07.07.2021 தேதியிட்டு ரூ. 3,00,000/-த்தை பூர்த்தி செய்து புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், புகார்தாரர் காசோலை வேண்டாம் பணமாக கொடுக்கும்படி கேட்டதற்கு எதிரி அவரது வங்கிகணக்கில் போதிய தொகை இருப்பதாகவும், வங்கியில் காசோலையை தாக்கல் செய்தால் பணம் பெற்றுக்கொள்ளலாம் என எதிரி சொன்னதை நம்பி புகார்தாரர் அன்றைய தினமே அவரது வங்கி கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளியனூர் கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்ததாகவும், அந்த காசோலையானது எதிரியின் கணக்கில் போதிய தொகை இல்லை என கடந்த 14.07.2021 அன்று திருப்பப்பட்டதாகவும், இதுகுறித்து புகார்தாரர் எதிரிக்கு கடந்த 22.07.2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிரி கடந்த 03.08.2021 அன்று பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த பதில் அறிவிப்பில் உள்ள விபரங்கள் எதுவும் உண்மையல்ல என்றும், எதிரியின் வங்கி கணக்கில் போதிய தொகை இல்லை என தெரிந்தே எதிரி புகார்தாரரை ஏமாற்றி மோசடி செய்யும் எண்ணத்தில் காசோலையை கொடுத்துள்ளதால் அவர் மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம்புரிந்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்கும்படியும் வாதம் வைக்கப்பட்டுள்ளது.

10. எதிரி தரப்பில் எதிரிக்கு இந்த புகார்தாரரை யார் என்றே தெரியாது என்றும், எதிரி கடந்த 2018 ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் உள்ள விமல் என்பவரிடம் ரூ.1,50,000/- கடனாக பெற்றுக்கொண்டு அதற்காக பூர்த்தி செய்யப்படாத செம்பனார்கோவில் கிளை State Bank of India வங்கியின் இரண்டு காசோலைகளை கொடுத்ததாகவும், மேற்படி கடனை எதிரி விமலிடம் கொடுத்து தீர்த்த பின் காசோலையை திருப்பி கேட்டதற்கு விமல் வீட்டு பீரோவில் வைத்திருப்பதாகவும், தேடிப்பார்த்து திரும்ப கொடுப்பதாக உறுதி அளித்தார் என்றும், அதை நம்பி எதிரி திரும்பி பெறவில்லை என்றும், இந்த எதிரிக்கு புகார்தாரரை யார் என்றே தெரியாத நிலையில் மேற்படி காசோலையை வைத்துக்கொண்டு பணம் பறிக்கும் கெட்ட எண்ணத்தில் புகார்தாரர் இந்த புகார் மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எதிரி புகார்தாரரிடமிருந்து எந்த



KANIMOZHI Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.24 17:41:59 +0530

தொகையும் பெறவில்லை என்றும், எனவே, புகார்தாரர் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

11. புகார்தாரர் இந்த வழக்கினை எதிரியானவர் புகார்தாரரிடமிருந்து தனது குடும்ப செலவிற்காகவும், இதர கடன்களை தீர்ப்பதற்காகவும், கடந்த 04.12.2020 அன்று கடனாக ரூ.3,00,000/- பெற்றுக்கொண்டு புகார்தாரர் கேட்கும்போது திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டதாகவும், புகார்தாரர் எதிரியிடம் மேற்படி கடன் தொகையை திரும்ப கேட்டபொழுது எதிரி 07.07.2021 தேதியிட்ட ரூ.3,00,000/-த்திற்கான State Bank of India செம்பனார்கோவில் கிளை காசோலையை கொடுத்ததாகவும், மேற்படி காசோலையை புகார்தாரர் 07.07.2021 அன்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளியனூர் கிளையில் வசூலுக்காக செலுத்தியபொழுது எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என மேற்படி காசோலை கடந்த 14.07.2021 அன்று திருப்பப்பட்டதாகவும், மேற்படி காசோலை திருப்பப்பட்டது குறித்து எதிரிக்கு 22.07.2021 அன்று அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிரி தொகையை தர மறுத்துள்ளதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்றம்புரிந்துள்ளதாக தனது புகாரினை முன்னிட்டுள்ளார்.

12. புகாரில் கண்டுள்ள பொருண்மைகளை நிரூபிக்கும் பொருட்டு புகார்தாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். மேலும், வழக்குடன் தொடர்புடைய காசோலை ம.சா.ஆ.1 ஆகவும், வங்கியின் திருப்புதல் குறிப்பாணை ம.சா.ஆ. 2 ஆகவும், 22.07.2021 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.3 ஆகவும், எதிரி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை ம.சா.ஆ.4 ஆகவும், எதிரி கொடுத்த பதில் அறிவிப்பு ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13. மேற்படி ம.சா.1 ன் வாய்மொழி சாட்சியத்தை ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 உடன் இணைத்து பரிசீலனை செய்கையில் இந்த வழக்கு காசோலை எதிரியின் வங்கி



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.24 17:42:06 +0530

கணக்குடன் தொடர்புடைய காசோலை என்பதும், அது வங்கியில் பணமாக்க செலுத்தப்பட்ட பொழுது எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டது என்பதும் புலப்படுகிறது. எதிரி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், **"ம.சா.ஆ.1 ஆன காசோலை எனது வங்கி கணக்கின் காசோலை என்றால் சரிதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான் "** என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, எதிரி தரப்பில் வழக்கின் காசோலை எதிரியால் பராமரிக்கப்படும் வங்கி கணக்குடன் தொடர்புடைய காசோலை என்பதும், அதிலுள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்து என்பதும் எதிரி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

14. புகார்தாரர் தரப்பில் எதிரியானவர் காசோலையில் கண்டுள்ள தன்னுடைய கையெழுத்தை ஒப்புக்கொண்டுள்ளதால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139ன் கீழ் எழுகின்ற சட்டப்பூர்வமான அனுமானத்தை புகார்தாரருக்கு ஆதரவாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் சட்ட விதி என்றும், மேற்படி விதியானது மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 2015( 2) MLJ Crl SC 605 மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ரெங்கப்பா --எதிர்-- மோகன் என்ற முன்தீர்ப்புகளில் எடுத்துரைக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

15. மேற்கண்ட மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட முன்தீர்ப்பின் பொருண்மைகளையும் சட்ட விதிகளையும் பரிசீலனை செய்கையில், எதிரியானவர் பிரச்சனைக்குரிய காசோலையில் உள்ள தன்னுடைய கையெழுத்தை ஒப்புக்கொள்ளும்போது தொடர்புடைய காசோலையானது சட்டப்படியாக செலுத்தப்படவேண்டிய கடன் தொகை மற்றும் பொறுப்புக்காக வழங்கப்பட்ட காசோலை என்று மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139ன் கீழ் புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானித்துக்கொள்ள வேண்டும் என மொழிந்துரைத்துள்ளது.



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.24 17:42:14 +0530

16. இந்த வழக்கிலும் எதிரியானவர் இந்த வழக்கு காசோலை தன்னுடையது இல்லை என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும் மறுக்காததால் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 139ன் கீழ் எழுகின்ற சட்டப்பூர்வமான அனுமானத்தை புகார்தாரருக்கு ஆதரவாக முதல் நிலையில் உள்ளது என்பது புலப்படுகிறது.

17. மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139ன் கீழ் வழக்கின் காசோலை சட்டப்படியாக செலுத்தப்படவேண்டிய கடன் அல்லது பொறுப்பிற்காக வழங்கப்பட்ட காசோலை என அனுமானித்துக்கொள்ள சட்டத்தில் வழிவகை செய்திருந்தாலும் மேற்படி பிரிவின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ள அனுமானம் மறுத்தளிக்கக்கூடிய அனுமானம் ஆகும். எனவே, சட்ட அனுமானத்தை மறுத்தளிக்கும் சுமை எதிரிக்கு மாற்றப்பட்டுள்ளது. எதிரி தன் மீதுள்ள சுமையை புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதன் மூலமாகவோ, சாட்சிய சான்றாவணங்கள் மூலமாகவோ மறுத்தளித்துள்ளாரா? என்பது குறித்து பார்க்கும்பொழுது எதிரி தரப்பில் வைக்கப்படும் வாதம் என்னவென்றால், எதிரிக்கு புகார்தாரரை யார் என்றே தெரியாது என்றும், எதிரி மயிலாடுதுறையை சேர்ந்த விமல் என்பவரிடம் ரூ.1,50,000/–த்தை கடனாக பெற்றுக்கொண்டு அதற்காக பூர்த்தி செய்யப்படாத செம்பனார்கோவில் கிளை State Bank of India வங்கியின் இரண்டு காசோலைகளை கொடுத்ததாகவும், மேற்படி கடனை எதிரி விமலிடம் கொடுத்து தீர்த்த பின் காசோலையை திருப்பி கேட்டதற்கு விமல் வீட்டு பீரோவில் வைத்திருப்பதாகவும், தேடிப்பார்த்து திரும்ப கொடுப்பதாக உறுதி அளித்தார் என்றும், அதை நம்பி எதிரி காசோலையை திரும்ப பெறவில்லை என்றும், இந்த எதிரிக்கு புகார்தாரரை யார் என்றே தெரியாத நிலையில் மேற்படி காசோலையை வைத்துக்கொண்டு பணம் பறிக்கும் கெட்ட எண்ணத்தில் புகார்தாரர் இந்த புகார் மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் வாதம் வைக்கப்பட்டுள்ளது.

18. எதிரி மேற்படி கூற்றை நிரூபிக்கும் வகையில் எதிரி தன்னை எ.ம.சா.1 ஆக விசாரித்துகொண்டு சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், "**நான் பணத்தை யாரிடம் வாங்கினேன் என்றால் விமல் என்பவரிடம் வாங்கினேன், விமலிடம் பெற்ற கடனை அவரிடமே திருப்பி கொடுத்துவிட்டேன், விமல்**



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.24 17:42:22 +0530

**என்பவரிடம் கடன் வாங்கியதற்கான ஆவணங்கள் ஏதேனும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை "** என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி விமல் என்பவரிடம் கடன் வாங்கியதாகவும், அதற்காக இந்த வழக்கு காசோலையை கொடுத்ததாகவும் கூறியுள்ளார். ஆனால், அதை நிரூபிக்கும் வகையில் எதிரி தரப்பில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், விமல் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக எதிரி தரப்பில் விசாரிக்கப்படவும் இல்லை. எதிரி விமல் என்பவரிடம் பெற்ற கடன் தொகை முழுவதையும் கொடுத்துவிட்டு எதிரி கொடுத்த காசோலையை திரும்ப கேட்டதாகவும், விமல் மேற்படி காசோலையை பீரோவில் உள்ளது, தேடி எடுத்து தருவதாக கூறினார் என்றும் கூறியுள்ளார். ஆனால், அந்த காசோலையை விமல் என்பவரிடமிருந்து திரும்ப பெறுவதற்கு எதிரி எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த வழக்கு காசோலைக்கு Stop Payment செய்யுமாறு வங்கியில் எந்த மனுவும் எதிரியால் கொடுக்கப்படவில்லை. மேலும், எதிரி விமல் என்பவரிடம் கடன் தொகையை திருப்பி செலுத்திய விபரம் அன்னவாசல் கிராமத்தை சேர்ந்த ஞானசேகரன் என்பவருக்கு தெரியும் என கூறியுள்ளார். ஆனால், ஞானசேகரனை எதிரி தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. இந்த வழக்கு குறித்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற பிறகும் விமல் என்பவருக்கு எதிராக எதிரியால் எந்த புகாரோ அல்லது சட்ட நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை. மேலும் காசோலை திருப்பப்பட்டது குறித்த அறிவிப்பு எதிரிக்கு அனுப்பப்பட்ட பிறகும் எதிரியால் புகார்தாரருக்கு எதிராக எந்த சட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, எதிரி எடுத்துள்ள மேற்படி எதிர்வாதமானது புகார்தாரருக்கு ஆதரவாக உள்ள சட்டப்படியான அனுமானத்தை மறுத்தளிக்க போதுமான வகையில் அமையவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. இந்த வழக்கில் எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட கட்சி பெயரளவில் எடுக்கப்பட்ட கட்சியாகவே உள்ளது என்றும், புகார்தாரரின் வழக்கை பொய்ப்பிக்கும் விதத்தில் எவ்வித சாட்சிகளும் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்பதும் வழக்காவணங்களிலிருந்து இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எதிரி தனது தரப்பில் எடுக்கப்பட்டுள்ள கட்சியை சரியான முறையில் நிரூபிக்காததாலும், எதிரிமீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி புகார்தாரர் நிரூபித்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எதிரி தரப்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.24 17:42:30 +0530

118(a), பிரிவு 139ன் படியான சட்ட அனுமானத்தை எதிரி தரப்பில் மறுக்கவில்லை என்றும், புகார்தாரர் தரப்பில் புகார்தாரரின் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. இவ்வழக்கின் சூழ்நிலை, தன்மை, எதிரியின் வயது ஆகியவற்றை கருத்தில்கொண்டு இந்நீதிமன்றம் குவிமுச பிரிவு 360ன் கீழான பலன்களையோ அல்லது நன்னடத்தை சட்டத்தின் பலன்களையோ பெறத் தகுதியற்றவர் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. இறுதியாக, எதிரி மீதான மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் படியான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் கீழ் **6 மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை** விதித்து உத்தரவிடப்படுகிறது. மேலும், புகார்தாரருக்கு **ரூபாய் 3,00,000/–** நஷ்ட ஈடாக எதிரி கொடுக்கவேண்டும் என்று குவிமுச பிரிவு 357(3)ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. இந்த தீர்ப்பானது குவிமுச பிரிவு 255(2)ன் கீழ் வழங்கப்படுகிறது. எதிரியை குற்றத்தீர்ப்பிற்கு உள்ளாக்கியுள்ளதால் எதிரிக்கு தீர்ப்பின் நகலை இலவசமாக குவிமுச பிரிவு 363(1)ன் படி வழங்க உத்தரவிடப்படுகிறது.

22. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.24 17:42:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி.

**அட்டவணை :-**

**புகார்தாரர் தரப்பு சாட்சிகள்:-**

ம.சா.1 – கார்த்திகேயன் (புகார்தாரர்)

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | கடந்த 07.07.2021 தேதியிட்ட ரூ.3,00,000/- த்திற்கான SBI வங்கி செம்பனார்கோவில் கிளையின் 551415 என்ற எண் கொண்ட காசோலையின் அசல் |
| ம.சா.ஆ.2 | – | கிளியனூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியால் Funds Insufficient என்ற காரணத்துடன் 14.07.2021 அன்று திருப்பப்பட்ட திருப்புதல் குறிப்பாணையின் அசல் |
| ம.சா.ஆ.3 | – | கடந்த 22.07.2021 அன்று புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| ம.சா.ஆ.4 | – | 26.07.2021 தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை |
| ம.சா.ஆ.5 | – | 03.08.2021 தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி கொடுத்த பதில் அறிவிப்பு |

**புகார்தாரர் தரப்பு சான்று பொருட்கள்** :- இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் :-**
எ.ம.சா.1 – நித்தியசெல்வகுமாரி
**எதிரி தரப்பு சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:-**இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.24 17:42:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

**குறிப்பு :-**
எதிரி ஆஜர். எதிரிக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.